International Federation of
Library Associations and Institutions

# சர்வதேச பட்டியலாக்க கோட்பாடுகளின் அறிக்கை

**சர்வதேச நூலகச்சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தினது பட்டியலாக்க பிரிவினரும் மற்றும் அதன் சர்வதேச பட்டியலாக்க விதிமுறைகளின் கூட்ட நிபுணர்களும் இணைந்து தயாரித்தது.**

**2016 பதிப்பு**

**by Agnese Galeffi (chair), María Violeta Bertolini, Robert L. Bothmann, Elena Escolano Rodríguez, and Dorothy McGarry**

**மார்கழி 2016.**
**இது சர்வதேச நூலகச்சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தின் நிபுணர் குழுவால் ஆமோதிக்கப்பட்டதும் மற்றும் சர்வதேச நூலகச்சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தினது பட்டியலாக்க நியமனக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்டதுமான அறிக்கையாகும்.**

**மொழிபெயர்ப்பு :** திருமதி தயானந்தி சிறீதரன் **[B.A (Hons), (Jaffna), M.Sc (Hons) (LIS) (Madras), FLA (Sri Lanka)]**



ஐப்பசி 2017

இவ் ஆவணத்தின் உள்ளடக்கம் ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. மூல ஆவணத்திலிருந்து மொழிபெயர்க்கும்போது சிறு சொற்பிரயோகங்களில் வேறுபாடுகள் இடம்பெற்றிருக்கலாம். இம் மொழிபெயர்ப்பு உசாத்துணைத் தேவைக்காக மாத்திரமே வழங்கப்படுகிறது.

CC BY María Violeta Bertolini, Robert L. Bothmann, Elena Escolano Rodríguez, Agnese Galeffi, and Dorothy McGarry, 2016.

**பதிப்பாசிரியர் குழு (2016/2017)**

நீதா தமயந்தி பீரிஸ் (தலைமைப் பதிப்பாசிரியர்)

டில்மினி வர்ணசூரிய

துஷாரி செனிவிரத்ன

சுனேத்ரா காரியவசம்

முஹம்மட் மஜீத் மஷ்ரூபா

சுப்பிரமணியன் நவநீதகிருஷ்ணன்

**மீள்பார்வையாளர்:** கலாநிதி மைதிலி விசாகரூபன் **[B.A(Hons), BLISc, MLISc, PGDLAN, ALA (Sri Lanka) ]**

**ISBN:** 978-955-9075-28-8

© 2016 by María Violeta Bertolini, Robert L. Bothmann, Elena Escolano Rodríguez, Agnese Galeffi, and Dorothy McGarry. This work is licensed under the Creative Commons Attribution 4.0 International(CC BY 4.0) license. To view a copy of this license, visit: http://creativecommons.org/licenses/by/4.0

IFLA
P.O. Box 95312
2509 CH Den Haag
Netherlands

www.ifla.org

## பதிப்பாசிரியர் குறிப்பு

இலங்கை நூலகச் சங்கத்தின் 2017 – 2022 மூலோபாயத் திட்டத்திற்கமைவாக இலங்கை நூலகச் சங்க பதிப்புக் குழுவினர் IFLA எனப்படும் சர்வதேச நூலகச்சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தினால் பிரசுரிக்கப்பட்ட புலமை சார் அறிக்கைகள் நான்கினைச் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தினை ஆரம்பித்தனர்.

சங்கத்தின் மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், சுதேச மொழிகளில் காணப்படும் நூலகவியல் மற்றும் தகவல் அறிவியல் துறை சார்ந்த பதிப்புகளின் பற்றாக்குறை காரணமாக அத்துறை சார்ந்த மாணவர்களும் நூலகர்களும் எதிர்நோக்கும் இடர்பாடுகளை தவிர்ப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு இம்மொழியெர்ப்பு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், சர்வதேச தரத்திலான தகவல்களை நூலகர்களுக்கும் நூலகவியல் தகவல் விஞ்ஞான துறை மாணவர்களுக்கும் வழங்குவது இத்திட்டத்தின் மற்றுமோர் குறிக்கோளாக அமைகின்றது.

இம்மொழியெர்ப்பு திட்டத்தின் மூலம் தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்ட **"சர்வதேச பட்டியலாக்க கோட்பாடுகளின் அறிக்கை**" எனும் சர்வதேச நூலகச்சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபன (IFLA) ஆவணத்தின் மூலம் நூலகர்களும் நூலக தகவல் அறிவியல் துறை சார்ந்த மாணவர்களும் ஏனைய வாசகர்களும் சர்வதேச பட்டியலாக்க கோட்பாடுகள் தொடர்பான நவீன செல்நெறிகளைக் கற்றுக்கொள்வார்கள் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இத்திட்டத்தின் வெற்றிக்காக ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய பதிப்பாசிரியர் குழுவினர்களுக்கும் மெய்ப்புத் திருத்தம் மேற்கொண்ட மேற்பார்வையாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இம்மொழிபெயர்ப்புத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல ஆக்கமும் ஊக்கமும் அளித்த இலங்கை நூலகச் சங்கத்தின் மதிப்பிற்குரிய தலைவருக்கும் நிருவாகக்குழு அங்கத்தவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நீதா தமயந்தி பீரிஸ்

தலைமைப் பதிப்பாசிரியர்

இலங்கை நூலகச் சங்கம்

## விடய அட்டவணை


0. அறிமுகம் ........................................................................................................5

1. நோக்கம்.............................................................................................................6

2. பொதுக் கோட்பாடுகள் ....................................................................................7

3. நிறுவனங்கள், கற்பிதங்கள் மற்றும் தொடர்புகள் ..............................................9

4. நூல் விபரத் தரவுகளின் விவரணம் ..................................................................11

5. அணுகு முனைகள்.............................................................................................11

6. நூற்பட்டியலின் நோக்கங்களும் செயற்பாடுகளும்............................................16

7. தகவல் தேடலுக்கான அடிப்படைகள்..............................................................17

8. கலைச்சொற் தொகுதி.......................................................................................20

9 . உசாத்துணை வளங்கள் .................................................................................28

10 . 2016 அறிக்கையிலிருந்து பயன்படுத்தப்படாத சொற்றொடர்கள்………….. 29

11. பிற்பாடு .........................................................................................................30

**0.** அறிமுகம்:

நூலகப் பட்டியலாக்கம் தொடர்பில் "பரிஸ் கொள்கைகள்" ˙ என்று அழைக்கப்படும் மூலக் கொள்கை அறிக்கையானது, 1961 இல் நடைபெற்ற[1] சர்வதேச பட்டியலாக்க கொள்கைகள் மகா நாட்டினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இக் கொள்கைகள், பட்டியலாக்கம் செய்யும் போது அதில் ஒரே சீரான அதேவேளை சர்வதேச தராதரத்தைப் பேணுவதை விளங்குவதையே இது இலக்காகக் கொண்டது. இந்த இலக்கு உண்மையிலே அடையப்பட்டதாகவே உணரப்பட்டுள்ளது. பெரும்பாலான பட்டியலாக்க விதிகள் உலகளாவிய ரீதியில் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே கட்டாயமாகவோ அல்லது அதிகூடியளவிலேயோ பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும், இந்த சர்வதேச பட்டியலாக்கக் கொள்கைகள் இன்னும் பட்டியலாக்கம் செய்வோருக்கும் வாசகர்களுக்கும் உலகளாவிய ரீதியில் மிக அவசியமானவையாக நீண்டகாலமாகப் பயன்படுகின்றன. இவை இலத்திரனியல் பட்டியலாக்கத்தில் தேடுகைக்கும், புதிய தொகுதிகளின் கண்டுபிடிப்புக்கும் உதவுகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சர்வதேச நூலகச் சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனம் (IFLA) புதிய கொள்கைகள் பற்றிய அறிக்கையை உருவாக்கியது[2]. (2009 இல் வெளியிடப்பட்டது). இது இலத்திரனியல் நூலக பட்டியலாக்கத்திற்கும் அதற்கப்பாலும் கூட பிரயோகிக்கக்கூடியது. இதன் புதிய வடிவம் 2014 ஆம் 2015ஆம் ஆண்டுகளில் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான பொருத்தமான புதிய விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் பட்டியலாக்கம் தொடர்பான இப்புதிய நடைமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் இந்தப் பரிஸ் கொள்கைகள் பற்றிய அறிக்கையானது பரிஸ் கொள்கைகளின் நோக்கத்தை விரிவாக்கம் செய்தது. இந்த விரிவாக்கம் நூலகப்பட்டியல்களில் பயன்படுத்தப்படும் தகவல் வளங்கள் மற்றும் நூல் விபரப்பட்டியல் பதிவுகள், அதிகாரத் தகவல்கள் எல்லாவற்றையும் அடக்கியதாகும். இது கோட்பாடுகளையும் நோக்கங்களையும் மட்டுமன்றி சர்வதேச பட்டியலாக்க கொள்கைகளில் உள்ளடக்கப்படவேண்டிய வழிகாட்டி அறிவுறுத்தல்களையும் மற்றும் தகவல்களைத் தேடிப் பெறுவதற்கான திறன் மற்றும் வழிகாட்டல்களையும் உள்ளடக்கியுள்ளது. 2016ம் ஆண்டிற்கான இந்தப் பதிப்பு

---

[1] *International Conference on Cataloguing Principles (Paris : 1961). Report*. London: International Federation of Library Associations, 1963, p. 91-96. Also available in: Library Resources & Technical Services, v. 6 (1962), p. 162-167; and *Statement of principles adopted at the International Conference on Cataloguing Principles, Paris, October, 1961*. Annotated edition with commentary and examples by Eva Verona. London: IFLA Committee on Cataloguing, 1971.

[2] IFLA Cataloguing Principles: Statement of International Cataloguing Principles (ICP) and its Glossary. München: K.G. Saur, 2009. (IFLA Series on Bibliographic Control; v. 37). Statement available online <www.ifla.org/publications/statement-of-international-cataloguing-principles>.

பினவருவனவற்றைக் கவனத்தில் கொண்டுள்ளது. புதிய வகையான வாசகர்கள், திறந்த தகவல் அணுகைக்கான சாத்தியம், உள்ளக இயங்கு தன்மை, மற்றும் தகவலை அடைதல், கண்டு பிடிப்பு சாதனங்களின் இயல்புகள் மற்றும் பொதுவான வாசகர்களின் குறிப்பிடத்தக்க நடத்தை மாற்றம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டுள்ளது.

இந்த கொள்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

1. நோக்கம்
2. பொதுவான கோட்பாடுகள்
3. நிறுவனங்கள், கற்பிதங்கள் மற்றும் தொடர்புகள்
4. நூல் விபரணம்.
5. அணுகு முனைகள்
6. பட்டியலின் குறிக்கோள்களும் செயற்பாடுகளும்.
7. தகவல் தேடலுக்கான அடிப்படைகள்

இக்கொள்கை உலகம் முழுமைக்குமான மிகப்பெரிய பட்டியலாக்கப் பாரம்பரியத்தையும்[3] அதேவேளை சர்வதேச நூலகச் சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தின் (IFLA) இன்றைய தேவைகளின் கருத்துரு மாதிரிகளையும் கட்டியெழுப்புகிறது[4].

இவ்வறிக்கை நூல்விபரப்பட்டியல் மற்றும் அதிகாரக் கோவைத்தரவு என்பவற்றை சர்வதேச ரீதியில் பரிமாற்றிக் கொள்ளும் நிலையை வளர்த்துக் கொள்ள உதவும் என்பதுடன் சுயமாகப் பட்டியலாக்க விதிமுறைகளை உருவாக்குவோருக்கும் வழிகாட்டும் என நம்பப்படுகிறது.

---

[3] Cutter, Charles A. *Rules for a Dictionary Catalog*. 4th ed., rewritten. Washington, D.C.: Government Printing office, 1904; Ranganathan, S.R. *Heading and Canons*. Madras [India]: S. Viswanathan, 1955; and Lubetzky, Seymour. *Principles of Cataloging. Final Report. Phase I: Descriptive Cataloging*. Los Angeles, Calif.: University of California, Institute of Library Research, 1969.

[4] Functional Requirements: the FRBR Family of Models <www.ifla.org/node/2016>. Being currently under a consolidation process, this statement reflects some uncertainties of the transitional phase.

## 1. நோக்கம்

இவ்வறிக்கையிலுள்ள கோட்பாடுகள், பட்டியலாக்க விதிகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய வழிகாட்டலையும் பட்டியலாளர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களை விருத்தி செய்வதற்கான வழிகாட்டல்களையும் நோக்கமாகக் கொண்டவை. இவை நூல் விபரத் தரவு, அதிகாரக் கோவை, தற்கால நூல்விபரப் பட்டியல்கள், நூலகங்களால் உருவாக்கப்பட்ட நூல் விபரப்பட்டியல்கள், தரவுத் தொகுதிகள் என்பவற்றில் பிரயோகப்படுத்தப்படுகின்றன.

## 2. பொதுக் கோட்பாடுகள்

பட்டியலாக்க கோட்பாடுகளின் உருவாக்கமும், பட்டியலாளர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள், தகவல் பெறுகை மற்றும் பரிமாற்றம் என்பன பின்வரும் கோட்பாடுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன. இவற்றில் வாசகர்களின் சௌகரியமே மிகப்பிரதானமாகும். இதேவேளை 2.2 மற்றும் 2.3 என்பன அவற்றிற்குரிய தனித்துவ ஒழுங்கில் இல்லை. 2.2-2.13 ஆகிய கோட்பாடுகளில் ஏதாவது முரண்பாடுகள் காணப்படின் உள்ளக இயங்கு தன்மையானது (Interoperatability) ஏனையவற்றை விட உயர்ந்ததாகக் கணிக்கப்படும்.

### 2.1 வாசகர்களுக்கான சௌகரியம் (Convenieance of user)

இங்கு சௌகரியம் என்பது எதனைக் கருதுகின்றதெனில் வாசகர்களுக்குப் பொருத்தமானதும் பல்வகைப்பட்டதுமான தகவல்களை வைப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். “வாசகர்” என்ற சொல் பட்டியல் மூலம் நூல்விபரத்தையோ அல்லது அதிகாரத் தகவலையோ தேடும் நபரைக் குறிப்பதாகும். வாசகரின் மனப் போக்கினை ஒட்டியதாக தகவல் தேடுதலுக்கான விபரங்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியல்கள் அமைய வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

### 2.2 பொதுவான பாவனை (Common Usage)

பட்டியலில் பாவிக்கப்படும் சொற்பிரயோகங்கள் பெரும்பாலான வாசகர்களின் தேடுதலை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

### 2.3 பிரதிபலிப்பு (Representations)

நூல் விபரமானது நாம் பட்டியலாக்கம் செய்கின்ற குறித்த அந்த தகவல் வளத்தை அப்படியே பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். நபர்களின் மட்டுப்படுத்தப்பட்ட பெயர்கள், கூட்டு நிறுவனங்கள், குடும்பப் பெயர்கள் என்பன அப்படியே தம் இயல்பைப் பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட வடிவங்களிலுள்ள தலைப்புக்கள் மூலப் பிரதிகளில் உள்ளவாறே அமைய வேண்டும். இது சாத்தியமில்லையெனில் உசாத்துணை வளங்களில் உபயோகத்தில் உள்ளவற்றை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

2.4. துல்லியத்தன்மை (Accuracy)

தரப்பட்ட நூல்விபரம் மற்றும் அதிகாரக்கோவை தரவுகள் என்பன பட்டியலில் துல்லியமாகச் சித்தரிக்கப்பட வேண்டும்.

2.5. நிறைவும் தேவையும் (Sufficiency and necessity)

தேவையான தரவுக் கூறுகள் : இக்கூறுகள் விசேட தேவைகள் தேவைப்படும் வாசகர்கள் உள்ளிட்ட சகல வாசகர்களுக்கும் தகவல் தேடுகைக்கு வசதியை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும், பட்டியலின் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பவற்றைப் பூர்த்தி செய்வனவாகவும் அமைய வேண்டும். நிறுவனங்களை தெரிவு செய்தலோ அல்லது விபரிப்பதோ உள்ளடக்கப்பட வேண்டும்.

2.6 முக்கியத்துவம் (Significance)

தரவுக் கூறுகள் யாவும் நூல் விபரத்திற்குப் பொருத்தமானதாகவும் குறிப்பிடத்தக்கதாகவும் அமைய வேண்டும். நிறுவனங்களிடையேயான சிறப்பியல்புகளையும் அனுமதிக்க வேண்டும்.

2.7 சிக்கனமான தன்மை (Economy)

இலக்கை அடைவதற்கான வேறுவழிகள் இருக்குமாயின் நடைமுறையில் இலகுவான மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். (குறைவான செலவு அல்லது இலகுவான அணுகுமுனை)

2.8 நிலைத்திருக்கும் தன்மையும் தராதரமும் (Consistency and standadization)

தகவலை அடைவதற்கான இடங்களின் விபரங்களும் அவற்றின் அமைப்பும் மிகவும் தராதரமானவையாகவும் கூடியளவு நிலைத்திருக்கும் உறுதிப்பாட்டை உடையனவாகவும் இருக்க வேண்டும்

2.9 ஒருங்கிணைப்பு (Integration)

சகல வளங்கள், மற்றும் பதிவுகள் யாவற்றினதும் பெயர் வடிவங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் யாவும் ஒரு பொதுவான முறையிலும் முடியுமான வரையில் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைய வேண்டும்.

2.10 இணைந்து செயலாற்றும் தன்மை (Interoperability)

நூலகத்திற்குள்ளேயும் வெளியேயும் நூலகப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரமானது மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்படுவதும் அதன் பகிர்ந்து கொள்ளும் தன்மையும் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். தரவுப் பரிமாற்றத்திற்கும் சாதனங்களின் கண்டுபிடிப்பிற்கும் தன்னியக்க மொழிபெயர்ப்பு மற்றும் தெளிவுத் தன்மை என்பன அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.11 வெளிப்படைத் தன்மை (Openness)

சர்வதேச நூலகச் சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபனத்தின் திறந்த அணுகுகைக்கான அறிக்கையில்[5] வெளியிடப்பட்டவாறு வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கும் வகையிலும், திறந்த அணுகுகைக்கான கொள்கைகளை உறுதி செய்யும் வகையிலும் தரவுகள் மீதான கட்டுப்பாடுகள் மிகக்குறைவாகவே காணப்பட வேண்டும். தரவுகளின் அணுகுகைக்கான கட்டுப்பாடுகள் முழுதாக குறிப்பிடப்பட வேண்டும்.

2.12 அணுகும் தன்மை (Accessibility)

நூல்விபர மற்றும் தனித்துவ அதிகார தரவுகளை அணுகுதல் மற்றும் தேடற்கருவிகளின் தொழிற்பாடுகள் போன்றவை, நூலகர்களுக்கும் ஏனைய தகவல் தொழிலாளர்களுக்குமாக[6] சர்வதேச நூலகச் சங்கங்களின் ஐக்கிய ஸ்தாபன (IFLA) நன்னடத்தைக் கோட்பாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு சர்வதேச நியமங்களுடன் ஒத்துப் போவதாகக் காணப்பட வேண்டும்.

2.13 பகுத்தறியும் தன்மை (Rationality)

பட்டியலாக்கக் கோட்பாட்டிலுள்ள அறிவுறுத்தல்கள் பாதுகாப்பானவையாகவும் தன்னிச்சையானதாகவும் இருக்க வேண்டும். விசேட சந்தர்ப்பங்களில் அனைத்து கோட்பாடுகளையும் பின்பற்ற முடியாதிருப்பின் பாதுகாப்பான செயன்முறைத் தீர்வுகள் காணப்பட வேண்டும். அத்துடன் அதுபற்றிய பகுத்தாய்வு விளக்கப்பட வேண்டும்.

## 3. நிறுவனங்கள், கற்பிதங்கள் மற்றும் தொடர்புகள்

நிறுவனங்கள் என்பது வாசகர்களுக்கு ஒரு இன்றியமையாத விருப்பமான ஒரு விடயமாகும். ஒவ்வொரு நிறுவனமும் கற்பிதங்கள் என அழைக்கப்படும் முதற்தர சிறப்பியல்புகளால் விபரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் கற்பிதங்கள் மூலம் வாசகர்கள் வினாக்களை உருவாக்குவதோடு ஒரு குறிப்பிட்ட விடயத்தில் தகவலைத் தேடும் போது அவற்றின் பயனையும் விளக்க முடிகிறது. நிறுவனங்களுக்கிடையேயுள்ள தொடர்புகளை தொடர்பாடல் விளக்குகிறது.

உலகளாவிய நூல்விபரக் கருத்துருக்களில் கூறப்பட்டுள்ளவாறு பட்டியலாக்கமானது நிறுவனங்கள், கற்பிதங்கள் மற்றும் தொடர்புகள் என்பவற்றை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய கருத்துருக்களாவன : நூல் விபர

[5] <www.ifla.org/node/8890>

[6] <www.ifla.org/news/ifla-code-of-ethics-for-librarians-and-other-information-workers-full-version>

பதிவேடுகளுக்கான அடிப்படைத் தேவைகள் (Fundermental requirements for Biblographic records), அதிகாரக் கோவைத்தரவுக்கான அடிப்படைத் தேவைகள் (Fundermental requirements for Authority data), மற்றும் விடய அதிகாரக் கோவைத்தரவுக்கான அடிப்படைத் தேவைகள் (Fundermental requirements for subject authority data).

3.1 நிறுவனங்கள் : பின்வரும் விடயங்கள் நூல் விபரத்தரவு மற்றும் அதிகாரக் கோவைத் தரவுகளினால் பிரதிநிதிப்படுத்தப்பட வேண்டும்[7].

வேலை
வெளிப்பாடு
வெளியீடுகள்
உருப்படி[8]
நபர்
குடும்பம்
கூட்டு நிறுவனம்[9]
விடயம்
பெயர்[10]

3.2 கற்பிதங்கள் : பண்புகளால் அடையாளப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு விடயமும் தரவுக் கூறுகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
3.3 தொடர்புகள்: விடயங்களுக்கிடையேயான முக்கிய நூல் விபரத் தொடர்புகள் அடையாளப்படுத்தப் படவேண்டும்.

---

[7] Since the consolidation process involving FRBR, FRAD and FRSAD is currently underway, here are listed all the entities described in the aforementioned conceptual models. This brings some inconsistencies about Group 3 entities and about nomen in relation to names and access points

[8] Work, expression, manifestation, and item are the Group 1 entities described in the FRBR and FRAD models

[9] Person, family, and corporate body are the Group 2 entities as described in the FRAD model

[10] Thema (any entity used as a subject of a work) and nomen (any sign or sequence of signs by which a thema is known, referred to, or addressed as) are the entities introduced and described in the FRSAD model. Within the FRBR framework, thema includes Group 1 and Group 2 entities, and additionally, all others that serve as the subjects of works (i.e., Group 3 concept, object, event, and place). In FRSAD Nomen is a superclass of the FRAD entities name, identifier, and controlled access point. Being outside of its purpose, this Statement does not consider Nomen as the superclass of name, identifier and controlled access point.

## 4. நூல் விபரத் தரவுகளின் விவரணம்

4.1 ஒவ்வொரு வெளியீட்டிற்கும் தனித்தனி நூல் விபர விளக்கம் உருவாக்கப்பட வேண்டும்.

4.2 நூல் விபரத் தரவுகளின் விவரணமானது, வெளியீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாதனத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். அது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். அவையாவன : கற்பிதங்கள், உருப்படியுடன் தொடர்புடைய பண்புகளுக்கான தொடர்புகள், படைப்புக்கள் மற்றும் வெளிப்பாடுகள் என்பனவாகும்.

4.3 நூல்விபர தரவுகளின் விபரிப்பானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரத்தினைக் பின்பற்றியதாக இருத்தல் வேண்டும். நூலக சமூகத்திற்கு இது சர்வதேச தராதர நூல் விபரணம் ஆகும் (ISBD)[11]. துல்லியமானதும் மீளப் பயன்படுத்தத்தக்கதுமான தகவலைப் பெறும் பொருட்டு சர்வதேச நியமநூல் விபரணத்தின் தரத்திற்கேற்ற முறையில் வெளியிடப்பட்ட சகல விசைச் சேர்க்கைகளையும் திறந்த முறையில் அணுகுவதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 விபரங்கள் யாவும் பல்வேறு மட்டங்களில் பட்டியலாக்கத்தின் நோக்கத்திற்கோ அல்லது தரவுத் தொகுதிகளுக்கேற்ற வகையிலோ முழுமைப்படுத்தப்பட்டிருக்கலாம். முழுமைப் படுத்தப்பட்ட தரமானது வாசகர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

## 5. அணுகு முனைகள்

5.1 பொது

நூல் விபரங்களையோ அல்லது அதிகாரத் தகவலையோ பெறுவதற்கான அணுகு முனைகள் பொது கொள்கைகளைப் பின்பற்றி அமைக்கப்பட வேண்டும். (பார்க்க 2 பொது கொள்கைகள்) அணுகு முனைகள் கட்டுப்பாடுள்ளவையாகவோ அல்லது கட்டுப்பாடற்ற வையாகவோ இருக்கலாம்.

5.1.1 கட்டுப்பாடுள்ள அணுகு முனைகள் அதிகாரமளிக்கப்பட்டதும், தனிநபர், குடும்பம், கூட்டு நிறுவனம், தொழில், வெளிப்பாடு, வெளியீடுகள், உருப்படி, மற்றும் விடயம் போன்ற பெயர்களின் பல்வேறுபட்ட வடிவங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். தகவல் வளங்களுக்கான நூல் விபரத்தை உறுதிப்படுத்தி வைப்பதற்கான ஒரு உறுதிப்பாட்டை இந்த கட்டுப்பாடுள்ள அணுகு முனைகள் வழங்குகின்றன.

[11] 1 ISBD : International Standard Bibliographic Description. Consolidated ed. Berlin, München: De Gruyter Saur, 2011. (IFLA Series on Bibliographic Control; v. 44).

அதிகாரப் பெயர் வடிவங்கள், பெயர்களின் பல்வேறு வடிவங்கள் என்பவற்றை மட்டுப்படுத்துவதற்கு அதிகாரக் கோவை உருவாக்கப்பட வேண்டும். தெரிவு செய்பவர்கள் அதனை அணுகு முனைகளாகப் பயன்படுத்துவர்.

5.1.2 அதிகாரக் கோவையில் மட்டுப்படுத்தப்படாத பெயர்கள், தலைப்புக்கள், கோட்பாடுகள், திறவுச் சொற்கள் என்பனவற்றிற்கான நூல் விபரத்தரவாக கட்டுப்படுத்தப்படாத அணுகு முனைகள் வழங்கப்படலாம்.

5.2 அணுகு முனைகளைத் தெரிவு செய்தல்

5.2.1 ஆக்கங்கள் மற்றும் வெளியீடுகளுக்கான (கட்டுப்படுத்தப்பட்ட) அதிகாரமளிக்கப்பட்ட அணுகுமுனைகளை தகவல் சாதனங்கள் தன்னகத்தே கொண்டுள்ளன. வெளியீட்டுத் தலைப்பு (வழமையாக கட்டுப்படுத்தப்படாத) ஆக்கங்களின் கர்த்தாக்களுக்கான அணுகு முனைகள் என்பன நூல் விபர தரவுகளுக்கான அணுகு முனைகளாக வழங்கப்பட வேண்டும்.

ஒரு கூட்டு நிறுவனமானது அதன் சகல வெளியீடுகளுக்குமான ஆக்க கர்த்தாவாகக் கொள்ளப்படுகிறது. தலைப்புச் சொல்லானது வெளியீட்டின் பண்போடு ஒட்டியிருக்கும் போது முழு உள்ளடக்கத்திற்கும் கூட்டு நிறுவனமே பொறுப்பு என்பது தெளிவாக்கப்படுகிறது. ஒரு தனிநபர் ஒரு கூட்டு நிறுவனத்தின் சார்பாக உரிமையாளராகும் போது இது பிரயோகிக்கப்படும்.

5.2.2 நூல் விபரத் தகவல் வளத்தை தெரிவு செய்வதில் முக்கியம் என்று கருதப்படுமிடத்து தனிநபர், குடும்பம், கூட்டு நிறுவனங்கள் மற்றும் விடயங்கள் என்பன நூல் விபரத்தரவுக்கு வழங்கப்பட வேண்டும்.

5.2.3 தரவுக்கான பெயர் அதே போல் பல்வேறு பெயர் வடிவங்கள் என்பன அணுகு முனைக்கு உள்ளடக்கப்பட வேண்டும்.

5.2.4 மேலதிக அணுகுமுனைகள் தொடர்புடைய நிறுவனங்களின் பெயர்களினூடாக விளங்கப்படும்.

5.3 அங்கீகரிக்கப்பட்ட அணுகு முனைகள்

தரவுகளில் பெயரிற்கான அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை ஒரு உத்தரவாத தரவாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இப்பதிவு பல்வேறு பெயர் வடிவங்களின் அடையாளங்களாக இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அணுகு முனை ஒரு பட்டியலில் முன்னதாகவே காட்டப்படும்.

5.3.1 அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை ஒரு தர நிர்ணயத்துடன் பின்பற்றப்படும்

5.3.2 அங்கீகரிக்கப்பட்ட மொழி மற்றும் பிரதிகள்(Scripts)
பெயர்கள் பல மொழிகளிலோ அல்லது பல பிரதிகளிலோ காணப்படுமாயின் முலப்பிரதி ஆக்கங்களில் காணப்படும் மூல மொழி வடிவத்திற்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

5.3.2.1. பெயரானது பல்வேறு மொழிகளில் அல்லது அச்சுப்பிரதிகளில் காணப்படுமிடத்து, மூல மொழியிலுள்ள வெளியீடுகளிலுள்ளதை அடிப்படையாகக் கொண்டே அதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.3.2.1.1 எனினும் பட்டியலில் மூலமொழியானது பாவிக்கப்படாதவிடத்து அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனையானது வெளியீடுகளிலோ அல்லது உசாத்துணை வளங்களிலோ காணப்படும் மொழியையோ அல்லது பட்டியலில் வாசகர்களுக்குப் பொருந்தக்கூடியதாகவோ இருக்க வேண்டும்.

5.3.2.1.2 அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவத்தையோ அல்லது வேறுபட்ட பெயர் வடிவத்தையோ அடிப்படையாகக்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனையானது மூலமொழியிலேயே காணப்படும். கையெழுத்து அச்சு( Script) முடிந்தளவு மூலமொழியில் இருக்க வேண்டும்.

5.3.2.2 ஒலிபெயர்ப்பானது விரும்பப்படுமாயின் கையெழுத்துப்பிரதிகளின் உரையாடல்களுக்கான சர்வதேச தரநிர்ணய முறை பின்பற்றப்பட வேண்டும்.

5.3.3. விருப்பப் பெயரிற்கான தெரிவு
விருப்பப் பெயரிற்கான தெரிவு, அணுகு முனைக்கான பெயர்த் தெரிவில் வெளியீடுகளில் கூடுதலாகக் காணப்படும் பெயரோ அல்லது உசாத்துணை வளங்களில் காணப்பட்ட வகையிலோ பட்டியலில் வாசகர்களுக்கு பொருத்தமானதாகவோ காணப்படும்.

5.3.3.1 தனிநபர், குடும்பப் பெயர்கள் அல்லது கூட்டு நிறுவனங்களுக்கான விருப்பப்பெயர் தெரிவு
தனிநபரின் பெயரிற்கோ அல்லது குடும்பப் பெயர் அல்லது கூட்டு நிறுவனத்தின் பெயர்களுக்கோ அல்லது வேறுபட்ட பெயர்களோ அல்லது வேறுபட்ட பெயர் வடிவங்களோ பாவிக்கப்படுமாயின் அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனையாக ஒரு பெயரோ அல்லது ஒரு பெயர் வடிவமோ தெரிவு செய்யப்பட வேண்டும்.

5.3.3.1.1 வெளியீடுகளிலோ அல்லது உசாத்துணை வளங்களிலோ பல்வேறு பெயர் வடிவங்கள் காணப்படுமாயின் பின்வருவனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

a) அலுவலக உபயோகப் பெயரை விட பொதுவாக அறியப்படும் பெயரை அணுகுமுனையாகத் தெரிவு செய்தல். (Conventional name)

b) பொதுவாக உபயோகிக்கப்படும் பெயருக்குரிய குறிப்பு எதுவும் இல்லையெனின் அலுவலக உபயோகிப்புப் பெயர் அணுகுமுனையாகத் தெரிவு செய்யப்படலாம்.

5.3.3.1.2. ஒரு கூட்டு நிறுவனமானது பல்வேறுபட்ட பெயர்களை பல்வேறுபட்ட காலங்களில் பயன்படுத்துமாயின் அது முதற் பெயரிலிருந்து சிறு வேறுபட்ட வித்தியாசமாகக் காணப்படாவிடின் குறிப்பிடப்பட்ட பெயர் மாற்றமானது ஒரு புதிய பதிவாகவே காணப்படும். கூட்டு நிறுவனத்தின் பழைய பெயரிற்கு ஒரு தொடர்பை (Link) ஏற்படுத்திவிட வேண்டும்.

5.3.3.2 விருப்பத்திற்குரிய தலைப்பு, வெளியீடுகள் மற்றும் விடயங்கள்.

ஒரு வெளியீடானது பல தலைப்புக்களை கொண்டிருக்குமிடத்து அவ்வெளியீட்டிற்குரிய பொருத்தமான ஒரு தலைப்பு தெரிவு செய்யப்பட வேண்டும்.

வெளியீடுகளில் பல்வேறு தலைப்புக்கள் காணப்படுமிடத்து பின்வருமாறு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

a) முதலாவது வெளியீட்டில் காணப்படும் மூல மொழியிலுள்ள தலைப்பு அல்லது

b) பொதுவாக உபயோகப்படுத்தப்படும் தலைப்பு

5.3.4 அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனைக்கான வேறுபட்ட பெயர் வடிவங்கள்.

5.3.4.1 தனிநபர்களுக்கான வேறுபட்ட பெயர் வடிவங்கள்

தனிநபர் ஒருவரின் பெயரில் பல சொற்கள் காணப்படுமாயின் அங்கீகரிக்கப்பட்ட அணுகு முனைக்குரிய முதல் தெரிவாக வெளியீட்டிலோ அல்லது உசாத்துணை வளங்களிலோ[12] காணப்படும் தனிநபருடன் தொடர்புடைய நாடு மற்றும் மொழி என்பவற்றை கருத்திற்கொள்ள வேண்டும்.

---

[12] Names of persons : national usages for entry in catalogues. 4th revised and enlarged edition. München, K.G. Saur, 1996. (UBCIM publications ; new series, v. 16)<www.ifla.org/files/assets/cataloguing/pubs/names-of-persons_1996-pdf> . Updated versions of Name of persons are available online <www.ifla.org/node/5493>.

5.3.4.2 குடும்பப் பெயர்களுக்கான பல்வேறு வடிவங்கள்

குடும்பப் பெயர்களில் பல சொற்கள் காணப்படுமாயின் வெளியீட்டிலோ அல்லது உசாத்துணை வளங்களிலோ காணப்படும் குடும்பப் பெயர்களுடன் தொடர்புடைய நாடு, மொழி என்பவற்றைக் கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும்

5.3.4.3 கூட்டு நிறுவனங்களின் பெயர்களுக்கான பல்வேறு வடிவங்கள்

கூட்டு நிறுவனங்களின் பெயர்களுக்கான அணுகுமுனைத் தெரிவில் வெளியீடுகளிலோ அல்லது உசாத்துணைகளிலோ காணப்படும் பெயர்கள் நேரடியாகப் பயன்படுத்தப்படும்.

5.3.4.3.1 கூட்டு நிறுவனங்களினது பெயரானது ஒரு அதிகாரத்துவமானதாகவோ அல்லது பிராந்திய ரீதியானதாகவோ காணப்படுமாயின் அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனையானது தற்போது பாவிக்கப்படும் பிராந்திய பெயர், மொழி என்பவற்றை கருத்தில் கொண்டு மற்றும் வாசகர்களின் தேவைக்குப் பொருத்தமான பட்டியல் முறையில் காணப்பட வேண்டும்.

5.3.4.3.2 ஒரு கூட்டு நிறுவனத்தின் பெயரானது ஒரு துணை நிகழ்வையோ அல்லது துணை நிறுவனத்தையோ அடையாளப்படுத்தப் போதுமானதாக இல்லாவிடின் அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனைக்கு அதன் மூல உயர் நிறுவனத்தின் பெயர் கொடுக்கப்பட வேண்டும்

5.3.4.4 தொழில்களுக்கான பெயர் வடிவங்கள் வெளிப்பாடுகள் மற்றும் விடயங்கள்.

தொழில்கள், வெளிப்பாடுகள், வெளியீடுகள் மற்றும் விடயங்களுக்கான அதிகார அணுகுமுனை போன்றவை ஒரு தனியான தலைப்பிலிருந்தோ அல்லது ஒரு வேலைக்கான ஆக்ககர்த்ததாவுடன் இணைந்த தலைப்பிலிருந்தோ உருவாக்கப்படலாம்.

5.3.4.5 பெயர்கள் மத்தியில் தனித்துவ வேறுபாடு

தேவையேற்படின் ஒரே பெயரை வேறு பெயர்களிலிருந்து வேறுபடுத்த மேலதிக பண்புகள் அதிகார அணுகுமுனைக்கான தன்மைகளாக சேர்க்கப்படலாம். விரும்பின் ஒரே மாதிரியான அடையாளப்படுத்தக் கூடிய பண்புகள் வேறுபட்ட பெயர் வடிவங்களின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்படலாம்.

5.4 வேறுபட்ட பெயர்களும் வேறுபட்ட பெயர் வடிவங்களும்

அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனைக்கு பெயரைத் தெரிவு செய்யும் போதெல்லாம் பல்வேறு வகைப்பட்ட பெயர்களும் வடிவங்களும் பல்வேறு வகைப்பட்ட பெயர் வடிவங்களும் மட்டுப்படுத்தப்பட்ட பெறுகைக்கான அதிகாரபூர்வத் தரவாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

## 6. நூற்பட்டியலின் நோக்கங்களும் செயற்பாடுகளும்

நூற் பட்டியல் என்பது ஒரு தரம் வாய்ந்த திறமையுள்ள ஒரு சாதனம் ஆகும். இச்சாதனம் ஒரு வாசகரை பின்வரும் முறைகளில் ஏற்புடையவராக்கும்

6.1 பதிவுகளின் தொடர்புகள் மற்றும் பண்புகள் என்பவற்றைப் பயன்படுத்தி தேடுவதன் பயனாக ஒரு சேர்க்கையிலுள்ள தகவல் வளங்களின் நூல் விபரத்தை அறிய முடியும்.

- ஒரு சேர்க்கையிலுள்ள வளங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு தனி வளத்தையோ ஒரு தொகுதி வளங்களையோ தேடிப் பெறுவதற்கு
- ஒரே விதமான ஆக்கங்களின் எல்லா வளங்களையும் அறிவதற்கு
- ஒரே விதமான வெளிப்பாடுகளை கொண்ட சகல வளங்களையும் அறிவதற்கு
- ஒரே விதமான வெளியீடுகளை எடுத்துக்காட்டும் சகல வளங்களையும் அறிவதற்கு
- தரப்பட்ட ஒரு தனி நபர், குடும்பம், கூட்டு நிறுவனங்கள், ஆகிய வளங்களை அறிவதற்கு
- ஒரு விடயம் தொடர்பான சகல வளங்களையும் அறிய
- வேறு விதமான வரையறைகளால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வளங்கள் (மொழி, வெளியிடப்பட்ட இடம், வெளியிடப்பட்ட திகதி, உள்ளடக்கம், ஊடக வகை, தொழில் வகை) வழமையாக இது ஒரு இரண்டாந்தர தேடல் வகையாகும்.

6.2 நூல் விபரத்திற்குரிய தகவல் வளத்தையோ அல்லது முகவரையோ அடையாளப்படுத்துவதற்கு (that is, to confirm that the described entity corresponds to the entity sought or to distinguish between two or more entities with similar characteristics)

6.3 வாசகரின் தேவைக்கு மிகவும் பொருத்தப்பாடுள்ள நூல் விபர தரவுகளை தகவல் வளத்தை தெரிவு செய்ய (மொழி, உள்ளடக்கம், தொழில் போன்ற வாசகரின் தேவைகளுக்கு முகங்கொடுக்கும் வகையிலான வளத் தெரிவு செய்ய அல்லது வாசகரின் தேவைக்கேற்ப இல்லாது பொருத்தப்பாடற்றதாக இருப்பின் இதனை நிராகரிப்பதாகும்.)

6.4 விபரிக்கப்பட்ட விடயத்தை பெறுவதற்கோ(ஒரு வாசகரை இவ்விடயத்தை விலை கொடுத்து வாங்குவதற்கோ அல்லது கடனாக வாங்குவதற்கோ ஏற்புடையதாக்கும். அல்லது

இலத்திரனியல் தொடர்பினால் இதனைப் பெற்றுக் கொள்வதற்கோ உதவும்) அல்லது நூல் விபரத்தையோ அல்லது அதிகாரத் தரவையோ பெற்றுக் கொள்ள உதவும்.

6.5 சரியான திசையில் செல்லவும் ஆராயவும்

பட்டியலின் உள்ளே நூல் விபரம் மற்றும் அதிகாரத்தரவு என்பவற்றின் தர்க்க ரீதியான ஒரு ஒழுங்கமைப்பின் மூலமும் தரவுக் கூறுகளுக்கிடையேயான தெளிவான தரவுத் தொடர்பு வழங்கலாலும் பட்டியலுக்கப்பால் ஏனைய பட்டியல்களுக்கும் மற்றும் நூலகம் சாராத விடயங்களுக்கும்.

## 7. தகவல் தேடலுக்கான அடிப்படைகள்

7.1 தகவல் தேடல்

அணுகு முனைகள்:

1. தகவல் பெறக்கூடிய நூல் விபரத் தரவுகளை வழங்குதல்
2. தேடல் முடிவுகளை ஒன்று சேர்த்தலும் வரையறை செய்தலும்.

7.1.1 தேடற் பொறிகள்

தரப்பட்ட நூலக பட்டியலோ அல்லது நூல் விபரக் கோவையிலோ எந்த ஒரு தேடற்பொறி காணப்படினும் அதன்மூலம் பெயர்களைத் தேடக்கூடியதாகவும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். பெயர்கள் தேடக்கூடியனவாகவும் பெறக் கூடியனவாகவும் இருக்க வேண்டும் (முழுப் பெயர், பெயர் வடிவங்கள், திறவுச் சொற்கள், கூட்டுத் தொடர்கள், truncation). தகவலின் நெகிழ்ச்சித் தன்மையையும் மீண்டும் பாவிக்கும் தன்மையையும் அதிகரிக்கும் வகையில் ஒரு நூலகம் சாராத தகவல் தேடல் பொறிகளால் கூட தேடக்கூடிய வகையில் தகவலானது திறந்த முறையிலும் தேடக்கூடிய முறையிலும் இருக்க வேண்டும்.

7.1.2 அத்தியாவசியமான அணுகு முனைகள்:

நூல் விபரப்பட்டியலில் உள்ள ஒவ்வொரு பதிவிலும் உள்ள பிரதான கற்பிதங்களும் அவற்றின் தொடர்புகளுமே அத்தியாவசிய அணுகற் புள்ளிகள் ஆகும்.

7.1.2.1 நூல் விபரத்தரவிலுள்ள அத்தியாவசிய அணுகு முனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

ஒரு ஆக்கத்தினை உருவாக்கிய நபர் அல்லது ஒரு ஆக்கத்தின் முதலாவது கர்த்தா ஆகியோருக்குரிய அதிகாரத்துவ அணுகு முனைகள். (ஒரு ஆக்கத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட ஆக்ககர்த்தாக்களின் பெயர்கள் உள்ள வேளையில்) வெளியீட்டின்

அணுகு முனைகள் ( இது ஒரு ஆக்ககர்த்தாவிற்கான அதிகாரபூர்வ அணுகு முனையை உள்ளடக்கும்.)

வெளியீட்டுத் திகதி அல்லது ஒரு வெளியீடின் வெளியிடப்பட்ட நேரம்.

அணுகுமுனைகள் அல்லது ஆக்கங்களுக்கான நூற் பகுப்பாக்க எண்கள்

விபரிக்கப்பட்ட பதிவிற்கான நியம இலக்கங்கள் அல்லது அடையாளங்கள் மற்றும் தலைப்புக்கள்

7.1.2.2 அதிகாரத் தரவில் உள்ள அணுகு முனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

பதிவின் அதிகாரபூர்வப் பெயர்

பதிவிற்கான வேறுபட்ட பெயர்கள் மற்றும் வேறுபட்ட வடிவங்கள்

பதிவிற்கான அதிகாரப்படுத்தல்கள்

ஆக்கங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பெயர்கள் (விடய அணுகுமுனைகள் / பகுப்பாக்க இலக்கங்கள்)

7.1.3 மேலதிக அணுகு முனைகள்

நூல் விபரப் பதிவுகளிலுள்ள மேலதிக கற்பிதங்கள் மேலதிக அணுகுமுனைகளாகவோ அல்லது தேடுதலிற்கான மட்டுப்படுத்தப்பட்ட தேடற் பொறிகளாகவோ செயற்படலாம்.

7.1.3.1 அவ்வாறான நூல்விபரத் தரவுகள் உள்ளடக்குபவை ஆனால் அவை வரையறுக்கப்படாதவை.

ஆக்கம் ஒன்றை உருவாக்கிய முதலாவது ஆக்க கர்த்தாவிற்கு அப்பாற்பட்ட ஏனைய கர்த்தாக்கள்.

தனிநபர் பெயர்கள், குடும்பப் பெயர்கள், ஆக்க கர்த்தாக்கள் தவிர்ந்த கூட்டு நிறுவனங்களின் பெயர்கள் (நிகழ்வுகளை நடாத்துவோர்)

வேறுபட்ட தலைப்புக்கள் ( சமதலைப்புக்கள், )

தொடர் வெளியீடுகளுக்கான அதிகார அணுகு முனைகள்

நூல்விபரத்தரவு அடையாளங்கள்

வெளியீட்டிலுள்ள வெளிப்பாடு குறிப்பிடப்படும் மொழி

வெளியீட்டு இடம்

உள்ளடக்க வடிவம்

ஊடக வகை

Carrier type

7.1.3.2. அதிகாரத்தரவிலுள்ள கற்பிதங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

நிறுவனங்கள் தொடர்பான பெயர்கள் மற்றும் தலைப்புக்கள்

அதிகாரத் தரவு அடையாளங்காட்டிகள்

7.2 தகவலை வழங்கலும் மீளப் பெறுதலும்

ஒரே விதமான அணுகுமுறைகளுடன் தேடும் போது பெரிய அளவிலான நூல் விபரத்தரவுகள் கிடைக்கும். அப்போது அவை பட்டியலை பாவிக்கும் வாசகரின் வசதிக்காக ஒரு தர்க்க ரீதியான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மொழி அல்லது அணுகுமுனைகளுக்கான விபரிப்புக்கள் (Script) விரும்பத்தக்கது. ஒரு வாசகர் வேறுபட்ட வகைகளில் தெரிவு செய்யக் கூடிய வகையில் இருக்க வேண்டும். (வெளியீட்டுத் திகதி, அகர வரிசை ஒழுங்கு, பொருத்தமான நிலை) முடியுமான வரை பதிவுக் கூறுகளையும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளையும் காட்சிப் படுத்த முன்வர வேண்டும்.

## 8. கலைச்சொற் தொகுதி

இந்த கலைச்சொற் தொகுதியில் உள்ள சொற்கள் சர்வதேச பட்டியலாக்க கொள்கையில் காணப்படுகின்றன. இது சாதாரண சொல்லகராதி வரைவிலக்கணத்தில் உள்ளவாறல்லாமல் விசேட வகையில் பயன்படுத்தப்படும். அறிக்கையின் பாவனைக்கு முக்கியமான சொற்கள் சிலவும் இங்கு தரப்பட்டுள்ளன. முடிவில் 2009 சர்வதேச பட்டியலாக்க கோட்பாட்டு அறிக்கையில் காணப்படுகின்ற நீண்டகாலம் உபயோகிக்கப்படாத சொற்களாகக் காணப்படுகின்றன.

BT= Broader term; NT =Narrower term; RT = Related term

அணுகுமுனை: பெயர், தகவல் தேடும் சொல், காலம், விதிமுறை போன்றவற்றால் நூல்விபர அல்லது அதிகாரத்துவ தரவு தேடி அடையாளப்படுத்தப்பட்ட பயன்படும் சொல். அணுகுமுனைகள் பட்டியலாக்கத்தின் இலகுவான தொழில்பாட்டிற்கு இடமளிக்கின்றன.

மேலும் பார்க்க : தகவலைத் தேடக்கூடிய மேலதிக அணுகு முனை[NT] அதிகாரத் தரவு [RT], அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை[NT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை [NT], அத்தியாவசிய அணுகுமுனை [NT], பெயர் [RT], பெயர் [RT], மட்டுப்படுத்தப்படாத அணுகுமுனை[NT], பெயரின் பல்வேறு வடிவங்கள் [NT], உசாத்துணை : FRAD, IME, ICC, ICPWG

மேலதிக அணுகுமுனை : நூல்விபரத்தரவுகளை பெற்றுக் கொள்ளும் வழியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் பாவிக்கப்படும் அத்தியாவசிய அணுகு முனையே மேலதிக அணுகுமுனை எனப்படும்.

மேலும் பார்க்க : அணுகுமுனை[BT] அத்தியாவசிய அணுகுமுனை [RT],
உசாத்துணை : IME, ICC,

முகவர் : ஆக்கத்திற்குப் பொறுப்பாளர் (தனிநபர், குடும்பம் அல்லது கூட்டுநிறுவனம்) என வெளிப்பாடுகளின் பொறுப்பை இணைக்கும் அலகு.

மேலும் பார்க்க : கூட்டுநிறுவனம் [RT], ஆக்ககர்த்தா [NT], குடும்பம் [RT], தனிநபர் [RT],
உசாத்துணை : IME, rev WG

பண்பு : ஒரு அலகின் பண்பு. ஒரு அலகில் கற்பிதமானது உள்ளார்ந்தமாகவோ வெளிவாரியாகவோ சேர்க்கப்படும். கற்பிதங்கள் வெறும் இலக்கியங்களாகவோ அல்லது URI களாகவோ பதிவு செய்யப்படும்

மேலும் பார்க்க : உருமாதிரி [BT], அலகு[RT], தொடர்பு [RT],
உசாத்துணை : FRBR, ICP, rev WG

அங்கீகரிக்கப்பட்ட தரவு : தனிநபர், குடும்பம், கூட்டு நிறுவனம், வெளிப்பாடு, வெளியீடு, உருப்படி அல்லது விடயம் என்பவற்றின் மொத்த விபரம் ஆகும். இந்தத் தரவானது அணுகுமுனைகளாகப் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவங்கள், பெயர்கள், வேறுபட்ட பெயர் வடிவங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்படும்.

மேலும் பார்க்க : அணுகுமுனை [RT], நூல்விபரத்தரவு [RT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை [RT], அடையாளப்படுத்துநர் [RT]
உசாத்துணை : FRAD, ICP, rev WG

அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை: ஒரு அலகுக்காக மேலதிகமாக விரும்பப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனையானது அறிவுறுத்தல்களுக்கும் நியமங்களுக்குமேற்ப உருவாக்கப்பட்டுள்ளன.
மேலும் பார்க்க : அணுகுமுனை[BT], அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவம் [RT], மட்டுப்படத்தப்பட்ட அணுகுமுனை [BT], அத்தியாவசிய அணுகுமுனை [RT], பெயர்[BT], மேலதிகமாக விரும்பப்படும் பெயர் [RT], பெயர் மாறுபட்ட வடிவங்கள் [RT].
உசாத்துணை : IME. ICC

அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவம்: ஒரு அலகுக்கான அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனையாக பெயர் வடிவம் தெரிவு செய்யப்படுகிறது.
மேலும் பார்க்க : அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை[RT], வழக்கமான பெயர் [RT], பெயர் [BT], மேலதிகமாக விரும்பப்படும் பெயர் [RT], பெயர் மாறுபட்ட வடிவங்கள் [RT].
உசாத்துணை : IME. ICC

நூல்விபரத்தரவு : ஒவ்வொரு தரவுக் கூறுகளும் நூல் பற்றிய விபரங்களை விபரிப்பதுடன் அவற்றை வழங்கும் தன்மையுடையது.

மேலும் பார்க்க: அங்கீகரிக்கப்பட்ட தரவு [RT], நூல்விபரம் [NT],
உசாத்துணை : IME, ICC, ICP rev WG

நூல்விவரணம் : ஒரு தொகுதி நூல்விபரத் தரவு ஒரு வளத்தைப் பதிவு செய்வதுடன் அடையாளப்படுத்தப்படுத்தவும் பயன்படுகிறது.

மேலும் பார்க்க: நூல்விபரத் தரவு, [BT], விவரண பட்டியலாக்கம்

உசாத்துணை : ISBD cons

நூலக பிரபஞ்சம் : பிரபஞ்சஞ்சம் முழுமையும் உள்ள நூலகச் சேர்க்கை தொடர்பானது. விரிவாகக் கூறின் இது சுவடிகள் நிலையங்கள், அருங்காட்சியகங்கள், போன்ற ஏனைய தகவல் சமூகங்களையும் உள்ளடக்கியுள்ளது.

உசாத்துணை : IME, ICC, ICP rev WG

நூல் விபரம் தொடர்பான முக்கியத்துவம் : ஒரு அலகின் அல்லது கற்பிதத்தின் அல்லது தொடர்பின் தரமானது நூல்விபர வளங்களிலே சிறப்பான ஒரு கருத்தையோ அல்லது பெறுமதியையோ கொண்டது.

உசாத்துணை : IME, ICC

Carrier type : A designation thet reflects the format of the storage medium and housing of a carrier in combination with the type of intermediation device required to render, view run etc. the content of a resource.

மேலும் பார்க்க : உள்ளடக்க வடிவம் [RT], வெளிப்பாடு [RT],

உசாத்துணை : IME, ICC.

உருமாதிரி: A model that conceptualizes the realm of the bibliographic universe using an analysis technique, such as entity/ relationship modelling.

மேலும் பார்க்க் : கற்பிதம் [NT], அலகு [NT], தொடர்பு [NT],

உசாத்துணை : ICP rev WG

உள்ளடக்க வடிவம் :ஒரு வளத்தின் உள்ளடக்கம் வெளிப்படுத்தப்படும் ஒரு அடிப்படை வடிவம்.

மேலும் பார்க்க : Carrier type [RT], வெளிப்பாடு [RT],

உசாத்துணை : ISBD cons

மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை : அதிகாரத் தரவில் அணுகுமுனை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. பெயர்களின் அங்கீகரிக்கப்பட்ட வடிவங்கள் மற்றும் நியமிக்கப்பட்ட பல்வேறு வடிவங்கள்.

மேலும் பார்க்க : அணுகுமுனை[BT], அங்கீகரிக்கப்பட்ட தரவு [RT], அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை[NT], அத்தியாவசிய அணுகுமுனை [RT], பெயர் [RT], பெயர் [RT], மட்டுப்படுத்தப்படாத அணுகுமுனை[RT], பெயர் மாறுபட்ட வடிவங்கள் [NT].

உசாத்துணை : IME, ICC.

வழக்கமான பெயர் : தொழில் சார்ந்த பெயர் தவிர்ந்த ஒரு பெயரினால் அலகானது தெரிந்ததாகிறது.

மேலும் பார்க்க: அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவம்[RT],பெயர்[BT], மேலதிகமாக விரும்பப்படும் பெயர் [RT], பெயர் மாறுபட்ட வடிவங்கள் [RT].

உசாத்துணை : ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க விதிமுறைகளின் 2002ஆம் ஆண்டுப்பதிப்பிலிருந்து மாற்றம் செய்யப்பட்டது. சொற்றொகுதி, ICP rev WG

கூட்டுறவு நிறுவனம் : ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் குழு அல்லது ஒரு பெயரால் அடையாளப்படுத்தப்படும் ஒரு அமைப்பு

மேலும் பார்க்க : முகவர் [RT], ஆக்கியோன் RT], அலகு [BT], குடும்பம் [RT], தனிநபர் [RT],

உசாத்துணை : FRAD

ஆக்கியோன்: ஆக்கம் ஒன்றை உருவாக்கிய தனிநபர், குடும்பம் அல்லது கல்விசார் அல்லது கலை விடயங்களுக்குப் பொறுப்பான நிறுவனம்.

மேலும் பார்க்க : முகவர் [BT] கூட்டு நிறுவனம் [RT], குடும்பப் பெயர் [RT], தனிநபர்[RT],

உசாத்துணை : IME, ICC.

விவரணப் பட்டியலாக்கம். விபரண மற்றும் விடயம் சாராத அணுகு முறைகளை வழங்கும் பட்டியலாக்கத்தின் ஒரு பகுதி.

மேலும் பார்க்க : நூல் விபரண விளக்கம் [RT], விடயப்பட்டியலாக்கம். [RT],

உசாத்துணை : IME, ICC.

அலகு : உரு மாதிரிப் பொருட்களின் ஒரு சுருக்க குறிப்பு வகையைச் சேர்ந்தது.

மேலும் பார்க்க : கற்பிதம் [RT], உருமாதிரி [BT], கூட்டு நிறுவனம் [NT], வெளிப்பாடு [NT], நிறுவனம் [RT], குடும்பம் [NT], உருப்படி[NT], வெளிப்பாடு;[NT], பெயர [NT], தனிநபர்[NT], தொடர்பு தனிநபர் [NT], விடயம் [NT], வேலை[NT],
உசாத்துணை : FBRR ஒருங்கிணைப்புப்குழு ICP rev WG யினால் மாற்றம் செய்யப்பட்டது.

அத்தியாவசிய அணுகுமுனை: ஒரு அலகின் கற்பிதத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுனையானது ஒரு நூல் விபர அல்லது அங்கீகரிக்கப்பட்ட தரவில் பதியப்பட்டிருக்கும். அது அத்தகவலை பெறுவதையோ அல்லது அடையாளப்படுத்தலையோ உறுதிப்படுத்தும்.
மேலும் பார்க்க : அணுகுமுனை [BT], மேலதிக அணுகுமுனை [RT], அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை [RT], மட்டுப்படத்தப்பட்ட அணுகுமுனை [RT],
உசாத்துணை : IME, ICC.

வெளிப்பாடு : அகரவரிசை அல்லது எண்ணுரு சார்ந்த, சங்கீத அல்லது கூட்டமைப்புக்கான குறிப்பு, ஒலி,வடிவம், பொருள் மற்றும் அசைவு போன்றவற்றின் கல்விசார் அல்லது கலை உணர்வைக்குறிக்கும்.
மேலும்பார்க்க : carriertype [RT], உள்ளடக்க வடிவம் [RT], அலகு[BT], உருப்படி[RT], வெளிப்பாடு[RT], வேலை[RT],
உசாத்துணை : FBBR

குடும்பம் : பிறப்பால் தொடர்புடைய இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர், திருமணம், சுவீகரிப்பு அல்லது சட்டரீதியான நிலை அல்லது தம்மைக் குடும்பமாக முன்னிலைப்படுத்துவோர்.
மேலும் பார்க்க : முகவர் ˙[RT], கூட்டு நிறுவனம் [RT], ஆக்ககர்த்தா[RT], அலகு[BT], தனிநபர் [RT],
உசாத்துணை : FRAD as modified byIME, ICC.
Form of content See Content form

இனங்காட்டி : ஒரு அலகுடன் தொடர்புடைய இலக்கம், குறியீடு, சொல், இலச்சினை, கருவி போன்றவை. ஒரு அலகிலிருந்து இன்னொரு அலகிற்கு அதன் அதிகாரத்திற்திற்கிடையில் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.
மேலும் பார்க்க : மட்டுப்படுத்தப்பட்ட தரவு [RT],
உசாத்துணை : FRAD

உருப்படி : வெளிப்பாட்டின் சாதாரண ஒரு உதாரணம்.

மேலும் பார்க்க : அலகு [BT], வெளிப்பாடு [RT], வெளியீடு [RT], வேலை [RT],

உசாத்துணை : FRBR

Key title: The unique name assigned to a continuing resource by the ISSN Network and inseparably linked with its ISSN

உசாத்துணை : ISBD cons.

வெளிப்பாடு : ஒரு வேலையின் உடலியல் சார்ந்த வெளிப்பாடு. அவ்வெளிப்பாடானது கூட்டு வேலைகளையோ தனி வேலையையோ அல்லது முழு வேலையின் ஒரு பகுதியையோ இணைப்பதாக அமையலாம். வெளிப்பாடுகள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகளாகவோ காணப்படலாம்.

மேலும் பார்க்க : அலகு [BT], வெளிப்பாடு [RT], உருப்படி[RT], வேலை [RT],

உசாத்துணை : FRAD, FRBR, IME,ICC

பெயர் : ஒரு எழுத்து, ஒரு சொல் அல்லது ஒருசொற்தொகுதி அல்லது பண்புகளால் ஒரு அலகு அறியப்படுவதே ஆகும். ஒரு தனி நபருக்கு அளிக்கப்படும் சொல் அல்லது பண்பு, குடும்பம் அல்லது கூட்டு நிறுவனம், ஒரு வேலைக்கு கொடுக்கப்படும் தலைப்பு, வெளிப்பாடு, வெளியீடு அல்லது உருப்படி என்பவற்றையும் உள்ளடக்கும் ஒரு அணுகு முனைக்கான ஒருஅடித்தளமாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும் பார்க்க : அணுகுமுனை [BT], அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை[RT], அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவம் [NT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை [RT], சாதாரண பெயர் வடிவம் [NT], மேலாக விரும்பப்படும் பெயர் [NT], பல்வேறுபட்ட பெயர் வடிவங்கள் [NT].

உசாத்துணை : FRBR as modified in FRAD.

இடுபெயர்: குறியீடு அல்லது தொடர் குறியீடுகளால் அறியப்படும் ஒரு விடயம் அல்லது கருப் பொருள். ஒரு கருப்பொருளானது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட விடயங்களைக் குறிப்பதாக அமையலாம். அணுகு முனைக்கான ஒரு அடித்தளமாக இது பயன்படுத்தப்படுகிறது.

மேலும்பார்க்க: அணுகுமுனை [RT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை[RT], அலகு[BT], பெயர்[RT],

உசாத்துணை : FRSAD

தனிநபர்: தனியாகவோ அல்லது குழுவாகவோ சுவீகரிக்கப்பட்ட ஒரு தனி அல்லது குழு அலகு.

மேலும் பார்க்க : கூட்டு நிறுவனம் [RT], ஆக்ககர்த்தா[RT], அலகு[BT], குடும்பம் [RT],
உசாத்துணை : FRBR as modified in FRAD modified by IME, ICC.

விரும்பப்படும் பெயர்: அறிவுறுத்தல்கள் அல்லது நியமங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட ஒரு அலகிற்கான பெயர். ஒரு அலகிற்கு அணுகுமுனையை உருவாக்குவதற்கு அடித்தளமாகப் பயன்படுத்தப்படுகிறது.
மேலும் பார்க்க : அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை[RT], அங்கீகரிக்கப்பட்ட பெயர் வடிவம் [RT], சாதாரண பெயர் வடிவம் [RT],பெயர் [BT],
உசாத்துணை : IME, ICC.

தொடர்பு :அலகுகளுக்கும் அவற்றின் நிகழ்வுகளுக்கும் இடையிலான விசேட தொடர்பு.
மேலும் பார்க்க : கற்பிதம் [RT], உருமாதிரி [BT], அலகு[RT],
உசாத்துணை : FRBR ஐ அடிப்படையாகக் கொண்டவை

விடயப்பட்டியலாக்கம் : விடயங்களையும் பெயர்களையும் அடையாளப்படுத்தும் பட்டியலாக்கத்தின் ஒரு பகுதி. இவற்றை உசாத்துணை செய்யப் பயன்படுகிறது.
மேலும் பார்க்க : விவரணப்பட்டியலாக்கம் [RT], விடயம் [RT],
உசாத்துணை : IME, ICC, ICP rev WG

விடயம் : ஒரு வேலையின் விடயமாகப் பயன்படுத்தப்படும் ஒரு அலகு. விடயங்கள் கணிசமான அளவு சிக்கலானவையாகவும் காணப்படும்.
மேலும் பார்க்க : அலகு[BT], விடயப்பட்டியலாக்கம் [RT],
உசாத்துணை : FRSAD

Type of carrier See Carrier type

மட்டுப்படத்தப்படாத அணுகுமுனை : அங்கீகரிக்கப்பட்ட தரவில் கட்டுப்படுத்தப்படாத ஆனால் தகவல் தேடலுக்குப் பயன்படும் சொல் அணுகு முனை.
மேலும் பார்க்க : அணுகுமுனை [BT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை[RT],
உசாத்துணை : IME, ICC, ICP rev WG

வாசகர் : நூலகப் பட்டியலிலிருந்து தனிநபர், குடும்பம், கூட்டுநிறுவனம் அல்லது நூலகத் தன்னியக்கம் போன்றவற்றின் மூலம் தகவலைத் தேடுவதுடன் நூல்விபரம் அல்லது அதிகாரத்தகவலைப் பயன்படுத்தல்.

உசாத்துணை : ICP rev WG

வேறுபட்ட பெயர் வடிவம் : ஒரு அலகில் அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனையாக தெரிவு செய்யப்படாத பெயர் வடிவம். அங்கீகரிக்கப்பட்ட தரவை அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனைக்கு ஒரு இணைப்பாக பயன்படுத்தப்படும்.

மேலும் பார்க்க : அணுகுமுனை [BT], அங்கீகரிக்கப்பட்ட அணுகுமுனை [RT], அங்கீகரிக்கப்பட் பெயர் வடிவம் [RT], மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுனை[BT], சாதாரண பெயர் வடிவம் [RT],பெயர் [BT],

உசாத்துணை : IME, ICC

வேலை : கல்விசார் அல்லது கலை சார்ந்த ஆக்கம்.

மேலும் பார்க்க : அலகு[BT], வெளிப்பாடு[RT], உருப்படி[RT], வெளியீடு[RT],

Sources: FRAD, FRBR, as modified by IME ICC.

## 9. Sources


FRAD – Functional Requirements for Authority Data: A Conceptual Model. München : K.G. Saur, 2009. (IFLA Series on Bibliographic Control; v. 34). Available online at: www.ifla.org/files/assets/cataloguing/frad/frad_2013.pdf

FRBR – Functional Requirements for Bibliographic Records: Final Report. – Munich : Saur, 1998. (IFLA UBCIM publications new series; v. 19). Available online at: www.ifla.org/publications/ifla-series-on-bibliographic-control-19 (Sept. 1997, as amended and corrected through February 2008)

Functional Requirements for Subject Authority Data (FRSAD): Final Report. – Berlin, München : De Gruyter Saur, 2011. (IFLA Series on Bibliographic Control; v. 43). Available online at: www.ifla.org/files/assets/classification-and-indexing/functional-requirements-for-subject-authority-data/frsad-final-report.pdf

GARR – Guidelines for Authority Records and References. 2nd ed., rev. – Munich : Saur, 2001. (IFLA UBCIM publications new series; v. 23). Available online at: www.ifla.org/files/assets/hq/publications/series/23.pdf

IME ICC – IFLA Meeting of Experts on an International Cataloguing Code (1st-5th : 2003-2007), recommendations from the participants.

Introducing the FRBR Library Reference Model / Pat Riva, Maja Žumer.– Paper presented at: IFLA WLIC 2015 - Cape Town, South Africa in Session 207 - Cataloguing. Available online at: http://library.ifla.org/1084

ISBD – International Standard Bibliographic Description. Consolidated edition. – Berlin, München : De Gruyter Saur, 2011. (IFLA Series on Bibliographic Control; v. 44).

Webster's 3rd – Webster's Third New International Dictionary. – Springfield, Mass. : Merriam, 1976.

# 10. Terms no longer used  in 2016 statement

Authority record *See* **Authority data**
Bibliographic record *See* **Bibliographic data**
Collection
Concept *See* **Thema**
Content type *See* **Content form**
Event *See* **Thema**
Object *See* **Thema**
Place *See* **Thema**

**Terms no longer used in 2009 Statement**

Bibliographical unit *See* **Manifestation**
Heading *See* **Authorized access point**, **Controlled access point**
Reference *See* **Variant form of name**
Uniform title *See* **Authorized access point**, **Authorized form of name**, **Name**

# 11. Afterword

This revision of the Statement of International Cataloguing Principles is a goal defined in the Cataloguing Section's Action Plan for 2012[13]. Through the Meeting reports, it is possible to follow the decisions taken by the Working Group and approved by the Standing Committee.

In this Afterword some issues that affect the revision in general are mentioned:

1. the 2009 Statement of International Cataloguing Principles' structure has been kept, even though it is acknowledged that the Statement doesn't refer just to principles;
2. the ongoing harmonization of FRBR, FRAD and FRSAD has largely affected the revision. In 2010, FRSAD has substituted the FRBR entities "concept", "object", "event" and "place" with "thema" and has created the superclass "nomen". Many efforts have been made to merge in the Statement all the entities in use avoiding conceptual overlapping and misunderstandings;
3. Principles *Interoperability*, *Openness*, and *Accessibility* have been introduced;
4. the sequence of sections has been modified: former §4. *Objectives and Functions of the Catalogue* is moved to §6;
5. in the introduction, the mention of the International Cataloguing Code has been removed according to the IFLA Cataloguing Standing Committee's decision;[14]
6. in §1 *Scope*, the mention of "archives, museums, and other communities" has been omitted. The Statement is based on library activities, conceptual models, standards, and tools. Even if the other communities' participation in data creation, management and sharing is always welcome, the cooperation doesn't imply the adoption of the same principles or definitions;
7. the §7 *Foundations for Search Capabilities* has been extended and terms "code", "catalogues", "opac" has been replaced using terms that comprise extended forms of collocated bibliographic information;
8. the word and concept of "record" (either bibliographic or authority) has been modified to "data" taking into consideration that the "record" is one way the data can be aggregated and visualized.

---

13 www.ifla.org/publications/cataloguing-section-action-plan

14 *2012 Minutes, Appendix IV Expansion of the ICP to form an international cataloguing code?* www.ifla.org/files/assets/cataloguing/reports/meeting_2012.pdf